DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.12

Name : **திரு.சரவணன்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 27.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.08.2020ம் தேதி முதல் நான் போடி நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அங்கு இரண்டு காவல் ஆய்வாளர்கள் பணியில் இருந்தார்கள். போடி நகர காவல் நிலைய குற்ற எண் 959 / 2019 சட்டப்பிரிவு 174 Crpc வழக்கானது காவல் ஆய்வாளர் திரு.ஷாஜகான் என்பவரால் புலன் விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில் 07.10.2020ம் தேதியன்று இந்த வழக்கில் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திரு பாண்டியர் சங்கர் அவர்கள் இந்த வழக்கிற்கான இறுதி கருத்துரை வழங்கினார், அதில் இறப்பிற்கான காரணம் விஷம் ஆர்கானிக் பாஸ்பரஸ் என்ற நச்சுப்பொருள் அவரது உடலில் இருந்ததால் அதன் மூலம் இறப்பு ஏற்பட்டதாக இறுதி கருத்துறை வழங்கினார்.

2. அந்த சான்றிதழ் பெற்றநிலையில் புலன் விசாரணை அதிகாரியான திரு.ஷாஷகான் அவர்கள் சட்டப்பிரிவினை மாற்றம் ஏதும் செய்யவில்லை. புகார் மனுவில் 1ம் எதிரியின் உடன் பிறந்த சகோதரர் ஜெய்லானி என்பவர் தனது சகோதரிக்கும், பல நபர்களுடன் தவறான உறவுமுறை இருந்ததாகவும், இந்த மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும், 1ம் எதிரியின்

தாயார் மற்றும் அவருடைய மகன் மற்றும் மகள் ஆகியோர்கள் இந்த இறப்பில் சந்தேகம் இருப்பதாக வாக்குமூலம் கொடுத்த நிலையில் அதனை பதிவு செய்திருந்தார். கடந்த 25.10. 2021 ஆம் தேதியன்று இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்கு உதவிய சாட்சிகள் வாதி ஜெய்லானி அவரது அம்மா உமைதா இறந்தவரின் மகன் பாசித் ரகுமான் ஆகியோர்களுக்கு பிரிவு 164 crpc படி நீதித்துறை நடுவர் முன்பு வாக்குமூலம் பெற உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் நீதிபதி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் பெயரில் நீதிமன்ற உத்தரவு பெற்ற 28.10.2021-ம் தேதியன்று சாட்சிகள் நீதிமன்றத்தில் அவர்களது வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் 09.12.2021 ஆம் தேதியன்று இறந்தவரின் மகள் நிஷா பானு என்பவர் வாக்குமூலம் பெற வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் பெயரில் நீதிமன்ற உத்தரவு பெற்று 21.12.2021ம் தேதியன்று சாட்சி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. இவ்வாறு புலன் விசாரணைக்கு நான் உறுதுணையாக இருந்தேன்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

1. இறந்துபோன நபர் என்ன உடல் நிலையில் அவர் இருந்தார் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அவர் எங்கு சிகிச்சை எடுத்து வந்தார், என்ன மருந்து மாத்திரைகள் உட்கொண்டு வந்தார் அவர் நடமாட்டத்துடன் இருந்தாரா என்ற விவரங்களை நான் தெரிந்து கொண்டேனா என்றால் நான் தெரிந்து கொண்டேன், ஆனால் ஏற்கனவே புலன் விசாரணை செய்து வந்த விசாரணை அதிகாரி இருந்ததால் நான் அது பற்றி சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை. எதிரிகளை செல்போன் உரையாடல்கள் குறித்து தெரிந்து கொள்வதற்கு அவர்களது கால் டீடைல்ஸ் பெறுவதற்கு நான் முயற்சி ஏதேனும் மேற்கொண்டேனா என்றால் அவ்வாறு முயற்சி எதுவும் மேற்கொள்ளவில்லை. 2-ம் எதிரி என்ன வேலை செய்து வந்தார் என்று எனது முதல் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அவர் கூலி வேலை மற்றும் மணல் கடத்தலில் ஈடுபட்டு வந்தார் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேன். அவர் அதே ஊரைச் சேர்ந்தவர் தான் என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. 2019 ஆம் ஆண்டு இறந்து போனவர் இறந்துள்ளார் என்றால் சரிதான். 2021 ஆம் ஆண்டு தான் சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு நீதித்துறை நடுவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கு என்ன காரணமென்றால் அந்த சம்பவ தினத்திற்கு 10 மாதங்கள் கழித்து தான் நான் அந்த காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பொறுப்பில் சேர்ந்தேன். அந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரியும் அதே காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிக் கொண்டுதான் இருந்தார். போலீசாரிடம் சொன்ன வாக்குமூலத்திற்கும் நீதிமன்றத்தில் வழங்கிய சாட்சியங்களுக்கும் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்குக்காக சொல்லிக் கொடுத்து மேற்கண்ட ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சம்பவயிடத்தை பார்வையிடவில்லை என்றால் சரிதான். எந்த கடையில் விஷம் வாங்கப்பட்டது என்ற விவரம் நான் தெரிந்து கொண்டேனா என்றால் விசாரணையில் அது பற்றி தெரிந்து கொள்ளவில்லை.

2. எனக்கு முன்பு விசாரணை செய்த விசாரணை அதிகாரி காவல் நிலையத்தில் வைத்து வழக்குக்காக உற்பத்தி செய்யப்பட்ட சாட்சிகளை மறு விசாரணை பேருக்காக செய்து அப்படியே மேல்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.27 19:38:16 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.